# முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

## அ.வ.எண். 218/2022

2026–ம் வருடம் மார்ச் திங்கள் 25–ம் நாளன்று வாதி தரப்பு சாட்சியாக வா.சா.1–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: நீலா** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**I.A.No.5/2026 என்ற மனுவில் 25.03.2026 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்பேரில் மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு முதல் விசாரணை**

கடந்த 27.05.1975 தேதியிட்ட Registration Copy of Will Executed by Rasa Gounder in favour of Palaniyappa Gounder and Nallamamal வா.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 03.06.1985 தேதியிட்ட Registration Copy of Will Executed by Malaiyammal in favour of Palaniyappa Gounder and Kaliyammal வா.சா.ஆ.20 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்துக்கள் பல கைகள் மாறி 1ம் பிரதிவாதிக்கும், பழனியப்பன் என்பவருக்கும் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். 10.09.1990 மற்றும் 18.09.1990 ஆகிய இரண்டு கிரைய ஆணங்கள் பழனியப்பன் என்பவர் உங்களுக்கு செட்டில்மெண்ட் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு செட்டில்மெண்ட் எழுதிய சொத்துக்களில் ஒருசிலவற்றை தங்கவேல் மற்றும் 4

நபர்களுக்கு விற்றுள்ளேன். உங்களிடமிருந்து வாங்கிய தங்கவேல் சிலபேருக்கு அந்த சொத்தை விற்றுள்ளார் என்றால் சரிதான். K.N.சுப்பிரமணியன் என்பவர் உங்களிலிடமிருந்து கிரையம் பெற்ற சொத்தை வேறு நபர்களுக்கு விற்றுள்ளார் என்றால் சரிதான். K.N.சுப்பிரமணியன் உங்களிடம் வாங்கி விற்ற சொத்தை 5, 6 நபர்கள் மாறி 5 ம்பிரதிவாதி 12 செண்ட் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ.19 ஆவணம் என்றால் சரிதான். மேற்சொன்ன தங்கவேல் இறந்துவிட்டார். தங்கவேலின் வாரிசுகள் தான் 2 முதல் 4 பிரதிவாதிகள் என்றால் சரிதான். தங்கவேல் உங்களிடம் கிரையம் வாங்கிய சொத்தில் விற்றதை போக 87 ½ செண்ட் சொத்துக்கள் தான் கைவசம் வைத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் இன்று வரை பாகம் பிரியவில்லை என்றால் சரிதான். 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 87 1/2 ½ செண்ட் பாத்தியம் என்பதாலும், 5ம் பிரதிவாதிக்கு 12 செண்ட் பிரித்துக்கொடுப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.25 17:54:56 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.